**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. 26/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW6 | | Examined as PW8 | |
| Name | : ராஜேந்திரன் | Defence | : |
| Father/Husband Name | : தங்கவேல் | Court | : |
| Village | : பெரம்பூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 58/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 28.03.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. (பிரிவு 355 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது)

முதல் விசாரணை:-

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன் ஒரு நாள் பெரம்பூரிலிருந்து மேலப்பெரும்பூருக்கு நானும் குமார் என்பவரும் சென்று கொண்டிருந்தோம். அப்போது பெரம்பூர் போலீசார் விபத்து சம்பந்தமாக பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக போலீசார் என்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நானும் குமாரும் கையெழுத்து செய்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது, எத்தனை பக்கம் எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் பிறகு என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் இல்லை.